**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

**க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2025(2026)**

**பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்தல்**

**விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) ஊடாக பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

| |
|---|
| பெறுபேற்று மீள்பரிசீலனையின் போது குறித்த விடைத்தாள்கள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் சிலரால் முழுமையாகப் பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீள்பரிசீலனையின் பெறுபேறாக புள்ளிகளில் அல்லது கிடைக்கப்பெற்றுள்ள தரங்களில் அதிகரிப்போ அல்லது குறைவோ ஏற்பட வாய்ப்புண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன். |

1. **குறித்த பரீட்சையின் மீள்பரிசீலனை விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.**

2. பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீசாத்திகள் ஆகிய இருவகை பரீட்சார்த்திகளும் மீள்பரிசீலனை விண்ணப்பிக்கும் போது தாமே விண்ணப்பங்களை முன்வைக்க வேண்டும்.

3. **விண்ணப்பங்கள் 25.06.2026 ஆம் திகதியிலிருந்து 08.07.2026 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

4. மீள்பரிசீலனைக்கு பின்வரும் முறைகளினூடாக விண்ணப்பிக்கலாம்.
   - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் **https://www.doenets.lk** இனுள் பிரவேசித்து 'எமது சேவை' என்பதின் கீழ் உள்ள **"Exam Information Centre"** இன் மீது Click செய்வதன் மூலம்
   - ❖ **https://onlineexams.gov.lk/eic** இனுள் பிரவேசிப்பதன் மூலம்

5. முறைமையினுள் பிரவேசிக்கும்போது உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சை – 2025(2026) இற்குரிய சுட்டெண்ணைப் பயன்படுத்த வேண்டும்.

6. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் (Technical Instructions), பொது அறிவுறுத்தல்கள் (Common Instructions) என்பவற்றை வாசித்தல் மற்றும் அறிவுறுத்தல் காணொளியைப் பார்வையிடல் என்பன சரியான முறையில் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தத் தேவையாகும்.

7. ஒரு பாடத்திற்குரிய மீள்பரிசீலனை கட்டணம் ரூ.200/- ஆகும். Credit Card / Debit Card மூலம் அல்லது தபாற் கந்தோரில் பணத்தைச் செலுத்தலாம்.

8. பணத்தைச் செலுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்தினை PDF வடிவில் பதிவிறக்கம் (Download) செய்ய முடிவதோடு, அவ் விண்ணப்பப்படிவத்தை உங்கள் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும். அதேபோன்று பணம் செலுத்திய பின்னர் உங்களது செல்லிடத் தொலைபேசிக்கு SMS தகவல் கிடைக்கப்பெறும்.

9. மீள்பரிசீலனை செய்யத் தேவையான சகல பாடங்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்படிவங்களைச் சரியாக பூரணப்படுத்துவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பங்களை நிகழ்நிலையில்(Online) ஒரு தடவை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். உரிய கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பத்திற்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

10. இது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் தேவைப்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை | **- 011 2785231/ 011 2785681/ 011 2785662/ 011 2784037** |
| உடனடி அழைப்பிற்கு | **- 1911** |
| தொழில்நுட்ப உதவிகளுக்காக | **- 0113661122/ 0113671568** |

முக்கியம் - ❖ **பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்களில் அதிபரின் பரிந்துரை/ கையொப்பம் தேவைப்படாது என்பதை தயவுடன் கவனத்திற்கொள்க.**

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை.
2026.06. 24